(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 4(7).]**

# பாராளுமன்றத்தின்
# 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2026 செப்தெம்பர் 25, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2026 ஒக்டோபர் 06, செவ்வாய்க்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— வியாபாரத் திறனை அதிகரித்தல், நிதியளிப்பிற்கான அணுகலை மேம்படுத்துதல், தொழினுட்பத்திறனை ஊக்குவித்தல் மற்றும் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் என்பவற்றின் ஊடாக அரசாங்கத்தினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறையைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் அரசாங்கத்தினால் 'நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் (SME) துறை அபிவிருத்தி வேலைத்திட்டம்' (இப்பிரிவில் இனிமேல் 'SDP' எனக் குறிப்பிடப்படும்) ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினாலும்;

பங்குபற்றும் நிதி நிறுவனங்களின் ஊடாகச் சலுகைக் கடன்களை வழங்குவதன் மூலம் விவசாய மற்றும் விவசாய வர்த்தகத் துறைகளைப் பலப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் ‘விவசாயப் பெறுமதிச் சங்கிலி நிதியளிப்பு மற்றும் வணிகமயமாக்கல் துறை அபிவிருத்தி வேலைத்திட்டம்' (இப்பிரிவில் இனிமேல் ‘AVC’ எனக் குறிப்பிடப்படும்) ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினாலும்;

மேலும், மேற்கூறப்பட்ட 'SDP' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நூறு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD 100 மில்லியன்) கொள்கை சார்ந்த கடனையும் (Policy-Based Loan - PBL) நூறு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD 100 மில்லியன்) நிதி இடைநிலைக் கடனையும் (Financial Intermediation Loan - FIL) உள்ளடக்கியவாறும், மற்றும் மேற்சொல்லப்பட்ட 'AVC' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக முப்பது மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD 30 மில்லியன்) கொள்கை சார்ந்த கடனையும் (PBL) எழுபது மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD 70 மில்லியன்) நிதி இடைநிலைக் கடனையும் (FIL) உள்ளடக்கியவாறும் நிதியுதவி அளிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) உடன்பட்டுள்ளமையினாலும்;

மேலும், 'SDP' வேலைத்திட்டத்தின் நூறு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD 100 மில்லியன்) தொகையைக் கொண்ட நிதி இடைநிலைக் கடன் (FIL) கூறும், 'AVC' வேலைத்திட்டத்தின் எழுபது மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD 70 மில்லியன்) தொகையைக் கொண்ட நிதி இடைநிலைக் கடன் கூறும் (FIL), அவசியமான தகுதிக்காண் ஆய்வுகள் (due diligence) நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் அடையாளம் காணப்படும் நிதி நிறுவனங்கள் ஊடாகத் தகுதியான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு கடனாக வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய நிறுவனங்கள் இந்நிதியங்களை விநியோகிப்பதற்காக நிதி இடைநிலையாளர்களாகச் தொழிற்படவுள்ளமையினாலும்;

2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பிரகாரம், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றம் அல்லது அரசுக்குச் சொந்தமான வர்த்தக முயற்சி அல்லாத வேறேதேனும் நிறுவனத்தின் பொறுப்புகள் தொடர்பான நிதியங்களை கடனாக வழங்குவதற்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் அவசியமாகின்றமையினாலும்;

அதன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக, அவசியமான தகுதிக்காண் ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் அடையாளம் காணப்பட்டுள்ள பின்வரும் நிதி நிறுவனங்களின் ஊடாக 'நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறை அபிவிருத்தி வேலைத்திட்டம்' ('SDP') மற்றும் 'விவசாயப் பெறுமதிச் சங்கிலி நிதியளிப்பு மற்றும் வணிகமயமாக்கல் துறை அபிவிருத்தி வேலைத்திட்டம்' ('AVC') என்பவற்றின் நிதி இடைநிலைக் கடன் கூறுகளின் கீழான நிதியங்களை மறு கடனாக வழங்கப்பட வேண்டுமெனவும், 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டம் மற்றும் ஏனைய பொருந்தக்கூடிய எழுதப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இப்பிரேரணையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அதிகாரமளிக்கப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

1. ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சி;
2. செலான் வங்கி பீஎல்சி;
3. சம்பத் வங்கி பீஎல்சி;
4. இலங்கை கொமர்ஷல் வங்கி பீஎல்சி;
5. டீஎஃப்சிசி வங்கி பீஎல்சி;
6. பான் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சி;
7. தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சி;
8. கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சி;
9. சனச அபிவிருத்தி வங்கி பீஎல்சி;
10. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி; மற்றும்
11. கார்கில்ஸ் வங்கி பீஎல்சி (தகுந்த ஆய்வுகளுக்கு உட்பட்டு).

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ரணவிரு சேவா அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2023),— 1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் 2025.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ரணவிரு சேவா அதிகாரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.11 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.11.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2023.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.08.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.10.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— பீ.சீ.சீ. லங்கா லிமிட்டட் கம்பனியின் வருடாந்த அறிக்கை (2021/2022),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2025.07.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய பீ.சீ.சீ. லங்கா லிமிட்டட் கம்பனியின் 2021/2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.08.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.10.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய உப்பு நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் (2021/2022),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2025.07.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய உப்பு நிறுவனத்தின் 2021/2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.08.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.10.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2022),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2024.08.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.08.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.10.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2022),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2024.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.08.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.10.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— பீ.சீ.சீ. லங்கா லிமிட்டட் கம்பனியின் வருடாந்த அறிக்கை (2022/2023),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2025.06.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய பீ.சீ.சீ. லங்கா லிமிட்டட் கம்பனியின் 2022/2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.08.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.10.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய உப்பு நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் (2022/2023),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2025.07.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய உப்பு நிறுவனத்தின் 2022/2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.08.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.10.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2023),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2025.05.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.08.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.10.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2023),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2025.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.08.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.10.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2023),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2025.03.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.08.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.10.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

தொழில் அமைச்சர்,— தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகச் சட்டத்தின் கீழ் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.07.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.07.22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

தொழில் அமைச்சர்,— தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் 2024.06.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் நிறுவகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.07.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.07.22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 மற்றும் 2026.02.05 ஆம் திகதிகளில் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2024.03.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.24 மற்றும் 2026.02.05 ஆம் திகதிகளில் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2017),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2024.03.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.24 மற்றும் 2026.02.05 ஆம் திகதிகளில் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2018),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2024.03.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2025.11.24 மற்றும் 2026.02.05 ஆம் திகதிகளில் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2026.02.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

# 2026 ஒக்டோபர் 08, வியாழக்கிழமை
# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

விசர்நாய்க்கடி நோயை ஒழித்தல் மற்றும் நாய்களைப் பதிவுசெய்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
### (2026, ஒக்டோபர் 08, வியாழக்கிழமை)

2166/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ‘தித்வா’ சூறாவளியினால் சேதமடைந்த அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதத்தின் தன்மை மற்றும் மதிப்பிடப்பட்ட சேதம்;

(iii) மேற்படி பாடசாலைகளின் சேதங்களைச் சீர்செய்வதற்கும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் இன்றளவில் அரசாங்கம், அமைச்சு, மாகாண சபைகள், வெளிநாட்டு உதவித் திட்டங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள்;

(iv) மேற்படி நிதி ஒதுக்கீடுகளின் மூலம் முழுமையாகப் புனரமைக்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை;

(v) இன்றளவில் முழுமையாகத் திருத்தப்படாத அல்லது புனரமைக்கப்படாத பாடசாலைகளின் எண்ணிக்கை;

மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) திருத்தப்படாத அல்லது புனரமைக்கப்படாத பாடசாலைகளைச் சீர்செய்வதற்குத் தேவையான மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2344/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டம் மற்றும் வருடாந்த அடிப்படையிலும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மாவட்டம் மற்றும் வருடாந்த அடிப்படையிலும்;

(iii) 2026 ஆம் ஆண்டில் இதுவரை பதிவுசெய்யப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டம், மாதாந்த, வயதுப் பிரிவு மற்றும் பாலினத்தின் அடிப்படையிலும்;

வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது டெங்கு நோயாளர்கள் அதிகளவில் பதிவாகும் மாவட்டங்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் யாவையென்பதையும்;

(ii) 2025 மற்றும் 2026 ஆகிய ஆண்டுகளில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் உள்ளூராட்சி நிறுவன மட்டங்களில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு வருடமும் ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதித் தொகைகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2355/2026

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள பிரதேச ஆதார வைத்தியசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர், தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஆளணியினர் மற்றும் வெற்றிடங்கள் நிலவும் பதவிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைகளில் நோயாளர் காவு வண்டி வசதிகள் இல்லாத அல்லது போதுமானளவு நோயாளர் காவு வண்டி வசதிகள் இல்லாத வைத்தியசாலைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைகளுக்கு நோயாளர் காவு வண்டிகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் இயங்கி வருகின்ற சித்த வைத்தியசாலைகளில் சேவையாற்றுகின்ற வைத்தியர்கள், சமுதாய மருத்துவ அலுவலர்கள் மற்றும் ஏனைய ஆளணியினரின் எண்ணிக்கை வைத்தியசாலை வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைகளில் வதிவிட வசதிகளுடன் கூடிய வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவற்றின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி முழுமையாக நிரப்பப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மன்னார் சிலாவத்துறை வைத்தியசாலையையும் இரணை இலுப்பைக்குளம் ஆரம்ப சுகாதார வைத்தியசாலையையும் தரமுயர்த்துவதற்காக முன்வைக்கப் பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பில் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றைத் தரமுயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைகளைத் தரமுயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படும் காலகட்டம் யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஒக்டோபர் 09, வெள்ளிக்கிழமை)**

2332/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டில் ஆயுர்வேதத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 'இலங்கையின் சுதேச மருத்துவ தேசிய கொள்கை 2024 -2034' தொடர்பில் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கையில் தொழில்வாண்மையாளர்களாக அரசாங்கத்தில் பதிவு செய்யப்படாத பாரம்பரிய மருத்துவர்களிடம் காணப்படும் 'பாரம்பரிய மருத்துவ அறிவு' மற்றும் அவற்றின் பயன்பாடுகளை வலுப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பில் ஆதிவாசிகளினதும் பாரம்பரிய சமூகங்களினதும் 'புலமைச் சொத்துரிமைகளை' ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்படி உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) மேற்படி பாரம்பரிய சமூகங்களின் "புலமைச் சொத்துரிமைகள்" தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2333/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படும் மேல் நீதிமன்றங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2017 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க நீதித்துறை (திருத்தச்) சட்டத்தின் மூலம் இலங்கையில் சேவையாற்றக்கூடிய அதிகபட்ச மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 75 முதல் 110 வரை அதிகரிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) 2026.08.01 ஆம் திகதியளவில் இலங்கையில் உள்ள மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) எதிர்காலத்தில் மேல் நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) மேற்படி மேல் நீதிமன்றங்கள் நிறுவப்படவுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது காணப்படும் சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இலங்கையில் காணப்படும் வர்த்தக மேல் நீதிமன்றங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) வர்த்தக மேல் நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அங்கீகரிக்கப்பட்டுள்ள 110 மேல் நீதிமன்ற நீதிபதிகளும் 2026.08.01 ஆம் திகதியளவில் முழுமையாக நியமிக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2356/2026

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் —

(i) கடலோர அரிப்பால் பாதிக்கப்பட்ட/பாதிக்கப்படும் கடலோரப் பகுதிகள் மற்றும் கிராமங்கள் குறித்த தகவல்கள் அமைச்சின் வசம் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், பாதிக்கப்பட்ட பகுதிகள், குடும்பங்கள் மற்றும் தனிநபர்களின் எண்ணிக்கை, மீனவக் குடும்பங்களதும் வீடுகளதும் எண்ணிக்கை, காணிகள், மீன்பிடித் துறைகள் உள்ளிட்ட பொது உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்ட சேத விபரம் ஆகியன ஒவ்வொரு மாவட்டம், பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு வாரியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மாவட்டங்களில் எதிர்காலத்தில் கடலோர அரிப்புக்கு உள்ளாக வாய்ப்புள்ள பகுதிகள் அறிவியல்பூர்வமாக அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி பகுதிகளில் அரிப்பைத் தடுப்பதற்காக கடலோரப் பாதுகாப்பு அணைகள், கடலோரப் பாதுகாப்பு, இயற்கைப் பாதுகாப்பு அல்லது பிற கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) பாதிக்கப்பட்ட மக்களின் முறைப்பாடுகளுக்கு உடனடித் தீர்வு காண அதிகாரிகள் அல்லது ஒருங்கிணைப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2026 ஒக்டோபர் 20, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2128/2026

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை தற்போது வரை பங்கேற்றுள்ள டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தற்போது இலங்கையிலுள்ள டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடாத்துவதற்கு பொருத்தமான மைதானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குருநாகல் மாவட்டத்தில், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடாத்துவதற்கு பொருத்தமான மைதானங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றியுள்ள வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி வீரர்களின் பெயர்களும், இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய பாடசாலைகளும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) டீ. பி. வெலகெதர மைதானம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடாத்துவதற்கு பொருத்தமானதா என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டரங்கில் நடாத்தப்பட்டுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டரங்கில் சர்வதேச கிரிக்கெட் போட்டியொன்று இறுதியாக நடாத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி விளையாட்டரங்கு எந்த நிறுவனத்திற்கு சொந்தமானதென்பதையும்;

(v) தற்போது மேற்படி விளையாட்டரங்கு வேறு நிறுவனமொன்றிற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், இந்த உரிமை மாற்றம் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

2139/2026

கௌரவ தினேஷ் ஹேமந்த,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2025 ஆம் ஆண்டில் நாய்க்கடி காரணமாக நீர்வெறுப்பு நோயால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டில் நீர்வெறுப்பு நோயாளர்களுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் தடுப்பூசியேற்றல் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆண்டில் நாய்களை மலடாக்குவதற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி யாதென்பதையும்;

(iv) அந்நிதியைப் பயன்படுத்தி மலட்டுத்தன்மைக்கு உட்படுத்தப்பட்ட தெரு நாய்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) நாய்களை மலடாக்குவதற்கான வேலைத்திட்டத்திற்காக 2026 ஆம் ஆண்டில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி யாதென்பதையும்;

(vi) அந்நிதியைப் பயன்படுத்தி 2026ஆம் ஆண்டில் இதுவரை மலட்டுத்தன்மைக்கு உட்படுத்தப்பட்ட தெருநாய்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் நாய்களை மலடாக்குவதற்கான வேலைத்திட்டத்தின் தன்மை குறித்து சிறு விளக்கத்தை தர முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2163/2026

கௌரவ சட்டத்தரணி சரத் குமார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மிளகு உற்பத்திக்குப் பிரதானமாகப் பங்களிப்புச் செய்யும் மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது உள்நாட்டில் பயிரிடப்படுகின்ற மிளகு வகைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிளகுச் செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக ஆராய்ச்சி நிறுவனமொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிகள் யாவை என்பதையும்;

(iii) மிளகுச் செய்கையை விஸ்தரிப்பதற்காக இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2192/2026

கௌரவ ருவன் விஜேவீர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச பாடசாலையொன்றில் ஆசிரியராக நியமனம் பெறுவதற்கான அடிப்படைத் தகைமையாகக் கல்விமாணிப் பட்டம் கருதப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி பட்டப்படிப்பினை நிறைவு செய்தபோதும், இதுவரை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்க்கப்படாத அரச மற்றும் தனியார் பட்டதாரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2197/2026

கௌரவ ஜே.சி. அலவத்துவல,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்டபதற்கு,— (1)

(அ) (i) கிராம உத்தியோகத்தர் சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி சேவையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) கிராம உத்தியோகத்தர் சேவைப்பிராமணம், சம்பள முரண்பாடுகள், ஆட்சேர்ப்பு நடைமுறை, பதவி உயர்வுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2207/2026

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் இலங்கையின் வருடாந்த மரமுந்திரிகை உற்பத்தி வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவு ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில், கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளில் மரமுந்திரிகை பயிரிடப்பட்ட காணிகளின் அளவும், மரமுந்திரிகை பயிரிடப்படாத காணிகளின் அளவும், ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளில் கூட மரமுந்திரிகை முறைப்படி பயிரிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியமைக்குக் காரணமாக அமைந்த காரணிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நிலைமையைத் தவிர்த்து, மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளில் மரமுந்திரிகைச் செய்கையை முறைப்படி ஊக்குவிப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2231/2026

கௌரவ பத்மசிரி பண்டார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுகாதார அமைச்சில் தற்போது சேவையாற்றி வருகின்ற சுகாதார கனிஷ்ட சிற்றூழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2010 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி காலப்பகுதியில் மிக அதிகமாக சுகாதார கனிஷ்ட சிற்றூழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஆண்டுகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2026 ஆம் ஆண்டு சுகாதார கனிஷ்ட சிற்றூழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் பொலன்னறுவை மற்றும் பதுளை மாவட்டங்கள் உள்ளீர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) அதன் காரணமாக மேற்படி இரண்டு மாவட்டங்களுக்கும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2249/2026

கௌரவ டபிள்யூ. எச். எம். தர்மசேன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் 2025.01.01 ஆந் திகதி முதல் தற்போது வரை ஒவ்வொரு போகத்திலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு, கமநல சேவைப்பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் மாவட்டத்தின் மொத்த நெல் விளைச்சல், ஒவ்வொரு போகத்திற்குமமைவாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி நெல் விளைச்சலில், அரசாங்கத்தின் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு, ஒவ்வொரு போகத்திற்குமமைவாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நெல் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2294/2026

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புத்தேகம ஆதார வைத்தியசாலையானது, அநுராதபுர போதனா வைத்தியசாலைக்குப் பின்னர் அனுராதபுர மாவட்டத்தில் கூடுதலான வெளிநோயாளர்கள் மற்றும் வதிவிட நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கும் வைத்தியசாலை என்பதையும்;

(ii) குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவான நோயாளர்களும் மேற்படி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொள்கிறார்கள் என்பதையும்;

(iii) A தரத்திலுள்ள ஆதார வைத்தியசாலையான அங்கு, அனுமதிக்கப்பட்ட ஆளணியுடன் ஒப்பிடுகையில் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதார ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வைத்தியசாலையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் காலப்பகுதி யாது என்பதையும்;

(iii) வைத்தியசாலை மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்பட்டபோதிலும், அதன் சில சேவைகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iv) ஆமெனில், இந்த வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்திற்கு பொறுப்பேற்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) மாகாணசபை தனித்து வைத்தியசாலையின் பராமரிப்பு, அபிவிருத்தி மற்றும் சேவைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிக்கல்கள் நிலவுகின்றனவா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2328/2026

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் ஒட்டுமொத்த பால் உற்பத்தியில் நுவரெலியா மாவட்டம் வகிக்கும் இடம் யாதென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்களினதும், கோழி வளர்ப்பாளர்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நுவரெலியா மாவட்டத்தில் கால்நடை வைத்தியர்களின் வெற்றிடங்கள் நிலவுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி அலுவலகத்தில் வாகனங்களின் தேவை நிலவுகின்றது என்பதையும்;

(iii) தித்வா புயலால் சேதமுற்ற பூண்டுலோயா கால்நடை அலுவலகம் தற்போது வரை மூடப்பட்ட நிலையில் உள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்படி (ஆ) (i),(ii) மற்றும் (iii) தொடர்பாக தற்போதுவரை மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஒக்டோபர் 20, செவ்வாய்க்ககிழமை)**

2254/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக இந்தியாவுடன் மின்சாரம், டிஜிட்டல், எரிபொருள் குழாய்வழி மற்றும் போக்குவரத்துத் தொடர்புகளை மேம்படுத்திக்கொள்வது பொருத்தமானது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அதற்காக, 2025.04.05 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த திகதியில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றின் மூலமும் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் அடிப்படை நோக்கங்கள் மற்றும் இலக்குகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையேயான பாக்கு நீரிணையில் மூலோபாய உட்கட்டமைப்பு வசதிகள் வழித்தடத்தின் நிர்மாணப் பணிகளில் இதுவரை அடையப்பெற்றுள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) ஒரு பகுதி மேம்பாலமாகவும், எஞ்சிய பகுதி கடலடிச் சுரங்கப்பாதையாகவும் கொண்ட ஒரு நேரடி இணைப்பை ஏற்படுத்துவது குறித்து இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே இன்றளவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அக்கருத்திட்டத்தின் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கிடைக்கின்ற இருதரப்பு நன்மைகள் யாவையென்பதையும்;

(iv) அக்கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2258/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் 2025.04.05ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைவாக எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி இணக்கப்பாடுகளுள் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டு, நிறைவுசெய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) ஒப்பந்தத்தின் பிரகாரம், எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தாமதத்திற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம், இந்தியாவுடன் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளுக்கமைய அவற்றை செயற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2334/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'ஆயுர்வேதப் பாதுகாப்புச் சபைகள்' நிறுவப்பட்டுள்ளதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் மற்றும் அவற்றின் பணிகள் யாவையென்பதையும்;

(ii) இச்சபைகளில் பிரதிநிதித்துவம் வகிக்கும் பாரம்பரிய மற்றும் ஆயுர்வேத மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பிரதிநிதித்துவங்களில் அதிகளவான பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள மருத்துவப் பிரிவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) இச்சபைகளிடம் காணப்பட்ட, பாரம்பரிய மருத்துவ மாணவர்கள் மீதான அரசாங்கத்தின் பொறுப்புடைமை நீக்கப்பட்ட ஆண்டு மற்றும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(ii) இச்சபைகளைப் பேணுவதற்காக கடந்த 10 ஆண்டுகளில் அரசாங்கத்தினால் ஒவ்வொரு சபைக்கும் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இச்சபைகளை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) சபைகளில் தற்போது நிலவும் பிரச்சினைகள் அடையாளங் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அவை யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி சபைகளின் மூலம் "வெத கெதர" கருத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கடந்த 05 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுவாரியாகவும் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஒக்டோபர் 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

33/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை விளையாட்டு எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகள் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) விளையாட்டு வீரர்களின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு மற்றும் அதன் சதவீதம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) விளையாட்டு வீரர்களின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படும் நிதியின் அளவை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

143/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நிகழ்ந்த சில குற்றச் சம்பவங்கள் காலப்போக்கில் கவனத்திற்கு உள்ளாகாமல் போகும் தன்மையைக் கொண்டுள்ளன என்பதையும்;

(ii) மேற்படி சம்பவங்கள் தொடர்பாக மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் எனத் தற்போதைய அரசாங்கம் அறிவித்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அடையாளங் காணப்பட்ட அவ்வாறான குற்றச் சம்பவங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் தன்மை யாதென்பதையும்;

(ii) மேற்படி சம்பவங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2298/2026

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025 ஆம் ஆண்டில் இலங்கையில் பதிவாகிய காட்டுயானைகளின் மரணங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டில் இடம்பெற்ற காட்டுயானைகளின் தாக்குதல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள காட்டுயானைகளின் வழித்தடங்கள் (யானைக் கடவைகள்) மற்றும் அது சார்ந்த பகுதிகளை உள்ளடக்கியதாக தற்போது காணப்படும் மின்சார வேலிகளின் மொத்த நீளம் கிலோமீற்றர்களில் யாதென்பதையும்;

(ii) 2025 ஆம் ஆண்டில் மின்சார வேலிகளை அமைப்பதற்கும் பராமரிப்பதற்கும் செலவிடப்பட்ட மொத்தச் செலவு யாதென்பதையும்;

(iii) யானை - மனித மோதல்கள் மற்றும் காட்டுயானைகளின் அச்சுறுத்தலுக்குத் தீர்வு காண்பதற்கு 2026 ஆம் ஆண்டிற்காக அமைச்சு தயாரித்துள்ள திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2300/2026

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நரிப்புல்தோட்டம், கின்னயடி, சந்திவெளி, மண்டூர், அம்பிளாந்துறை, காஞ்சிரங்குடா ஆகிய பகுதிகளில் பாலங்களை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி பாலங்களை நிர்மாணிப்பது, மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பொறுப்பாகும் என்பதையும்;

(iii) போதிய நிதி ஒதுக்கீடுகள் இல்லாததன் காரணமாக மேற்படி பாலங்கள் இதுவரையிலும் நிர்மாணிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால், மேற்படி பாலங்களை நிர்மாணிக்கும் பணியை பொறுப்பேற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நரிப்புல்தோட்டம் பாலத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வும், ஆழ்துளைச் சோதனைகளும் நிறைவடைந்துவிட்டனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) அதற்கான மதிப்பீட்டுத் தொகையாகிய, 850 மில்லியன் ரூபாவில் ஒரு பகுதியையேனும் 2027ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2326/2026

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2026.08.12 ஆம் திகதியளவில் அனைத்து சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் மற்றும் கைதிகளின் எண்ணிக்கை;

(ii) 20-30, 30-40, 40-50, 50-60, 60-70 மற்றும் 80 வயதிற்கு மேற்பட்ட வயதுப் பிரிவுகளின்படி உள்ள கைதிகளின் எண்ணிக்கை;

(iii) மேற்படி கைதிகளில், ரூ.10,000/-, ரூ.15,000/-, ரூ.25,000/-, ரூ.50,000/- மற்றும் ரூ.100,000/- ஆகிய தொகைகளை விஞ்சிய அபராதத் தொகைகளை செலுத்த முடியாத நிலையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை ;

வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மகசின், மஹர, குருவிட்ட மற்றும் பல்லன்சேனை சிறைச்சாலைகளில் ஏற்பட்ட மோதல்களின் காரணமாக உயிரிழந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அவ்வுத்தியோகத்தர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) அவ்வுத்தியோகத்தர்களுக்காக அரசாங்கத்தினால் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேற்படி மோதல்களின் காரணமாக இதுவரை உயிரிழந்துள்ள கைதிகள் மற்றும் சந்தேக நபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2353/2026

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்திலிருந்து ஏனைய மாகாணங்களுக்கும், ஏனைய மாகாணங்களிலிருந்து வட மாகாணத்திற்கும் இடமாற்றம் பெற்று 10 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலம் பணியாற்றிய போதிலும், தமது சொந்த மாகாணங்களுக்கு மீண்டும் இடமாற்றம் பெற முடியாத நிலையிலுள்ள ஆசிரியர்கள் மீது அமைச்சின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள், நீண்டகாலமாக தமது குடும்பங்களிலிருந்து பிரிந்திருப்பது, அவர்களின் மனநலம், கற்பித்தல் செயல்திறன், மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பில் ஆய்வு ஏதேனும் நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) சேவைத் தேவைகளையும் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையையும் கவனத்திலெடுத்து, மனிதாபிமான அடிப்படையில் அத்தகைய ஆசிரியர்களுக்கு தமது சொந்த மாகாணங்களுக்கு இடமாற்றம் வழங்க விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2402/2026

கௌரவ திலிண சமரகோன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான சுற்றுலா ஓய்வு விடுதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) கலா வாவி அணைக்கட்டின் மீது அதிகாரசபைக்குச் சொந்தமான சுற்றுலா ஓய்வு விடுதியொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தற்போது செயற்பட்டு வருகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி ஓய்வு விடுதியில் தற்போது பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டு காலப்பகுதியில் —

(i) மேற்படி ஓய்வு விடுதியின் ஊழியர்களுக்கு சம்பளமாகச் செலுத்தப்பட்ட நிதித்தொகை யாதென்பதையும்;

(ii) விடுதியின் நீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் இணையக் கட்டணங்களுக்காகச் செலுத்தப்பட்ட நிதித்தொகை யாதென்பதையும்;

(iii) தங்கியிருந்த நபர்களுக்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவுத்தொகை யாதென்பதையும்;

(iv) நிறுவன நடவடிக்கைகளுக்காக அதன் அறைகள் அல்லது முழு வளாகமும் பயன்படுத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை மற்றும் அதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் யாதென்பதையும்;

(v) வெளிநபர்கள், நிறுவனங்கள் அல்லது அமைப்புகளினால் அறைகள் அல்லது முழு வளாகமும் பயன்படுத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை மற்றும் அதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் யாதென்பதையும்;

(vi) மேற்படி ஓய்வு விடுதியின் பராமரிப்பு மற்றும் நிர்மாணப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில், வெளிநபர்கள், நிறுவனங்கள் அல்லது அமைப்புகளினால் மேற்படி சுற்றுலா ஓய்வு விடுதி பயன்படுத்தப்பட்ட நிறுவன நடவடிக்கைகள் அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2413/2026

கௌரவ அசித நிரோஷண எகொட விதான,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்ட பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமாக காணப்பட்ட மொத்தக் காணியின் விஸ்தீரணம் மற்றும் காணித் துண்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2026.07.01 ஆம் திகதியில் பல்வேறு நிறுவனங்களுக்காக வழங்கப்பட்டுள்ள காணியின் விஸ்தீரணம் மற்றும் காணித் துண்டுகளின் எண்ணிக்கை நிறுவன ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமான காணித் துண்டுகள் டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் தனியார் தரப்பினர்களுக்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சாட்டுதல் செய்வதற்கான அடிப்படை, காணியின் விஸ்தீரணம், பெறுமதி மற்றும் காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி காணிகள் அறுதிஉறுதியாக சாட்டுதல் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அரச அலுவல்களுக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகள் தனியார் தரப்பினர்களுக்கு சாட்டுதல் செய்வதற்கான சட்டரீதியான அடிப்படை யாது என்பதையும்;

(ii) அவ்வாறான சாட்டுதல்கள் சட்டத்திற்கு முரணானது என்பது உறுதிப்படுத்தப்பட்டால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2456/2026

கௌரவ தனுஷ்க ரங்கனாத்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள தோட்டப்புற பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு பாடசாலை வகைப்படுத்தலுக்கு அமைவாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளில் காணப்படுகின்ற மாணவர் – ஆசிரியர் விகிதம் யாது என்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தோட்டப்புற பாடசாலைகளுக்கு வருடாந்தம் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் சராசரி எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2026ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தோட்டப்புற பாடசாலைகளில் இருந்து 2025ஆம் ஆண்டில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் சதவீதம் யாதென்பதையும்;

(iv) மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் சதவீதம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2470/2026

கௌரவ ஆர்.எம்.ரஞ்சித் மத்தும பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 15 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு வருடாந்தம் உர மானியத்திற்காகச் செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வருடங்களில் உலக சந்தையினுள் நிலவிய உரங்களின் விலைகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) 2025 ஆம் ஆண்டு உர மானியத்திற்காகச் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இந்த உர மானியம் வழங்கப்பட்டுள்ள பயிர்கள் யாவை என்பதையும்;

(v) தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அனைத்து விவசாயிகளுக்கும் உர மானியம் வழங்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) உர விலை அதிகளவு உயர்வடைந்துள்ளமையால், அந்த விலைகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(vii) ஆமெனில், அந்த திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஒக்டோபர் 22, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

200/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் இந்த போகத்தில் உர மானியத்தைப் பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு கமநல சேவைப் பிரிவுகளின் படி மேற்படி எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி உர மானியத்திற்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மானியத்தை சரியாகவும் முறையாகவும் வழங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

372/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரே தடவையில் முழு நாட்டையும் சேதனப் பசளை விவசாயத்தில் ஈடுபடுத்துவது தொடர்பான கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கிய உத்தியோகத்தர்கள் மற்றும் இவர்கள் வகித்த பதவிகள் பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கொள்கையை நடைமுறைப்படுத்தியதன் காரணமாக நாட்டிற்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(iii) அவ்வுத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டஈட்டை அறவிட்டுக் கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

476/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் மொத்த குடிநீர்த் தேவைப்பாடு, கடந்த 05 ஆண்டுகளுக்கான வருடாந்தப் பயன்பாடு மற்றும் அடுத்த 10 ஆண்டுகளுக்கான உத்தேச தேவைப்பாடு ஆகியவை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) நீர் வழங்கலுக்காகப் பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு நீர்த்தேக்கத்திலிருந்தும் வழங்கப்படும் நீரின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நீர் வழங்கலில் ஏற்படும் ஏதேனும் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) கடந்த 05 ஆண்டுகளாக இற்றைவரை லீற்றர் ஒன்றுக்கான உற்பத்திச் செலவு, லீற்றர் ஒன்றுக்கான விற்பனை விலை மற்றும் லீற்றர் ஒன்றுக்கான விற்பனைப் பெறுமதியின் மீதான வரிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(vi) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) சபையின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்கான மொத்தச் செலவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டில் ஏதேனும் கடல்நீரை நன்னீராக்கும் நிலையங்கள் இயங்குகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நிலையங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய ஒவ்வொரு நிலையத்திலுமிருந்து லீற்றர் ஒன்றுக்கான உற்பத்திச் செலவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

685/2025

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற கருத்திட்டத்தின் கீழ் வட மத்திய மாகாணத்தின் அரசாங்கப் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிர்மாணப் பணிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களில் தற்போது இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டங்களின் பணிகளை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

771/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணி நடாத்திய தாக்குதலுக்கு இலக்கான இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தாக்குதல்கள் காரணமாக ஊனமுற்ற மற்றும் மரணமடைந்த இராணுவ உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி தாக்குதல்களின் போது கொள்ளையிடப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) கைப்பற்றப்படாத அல்லது ஒப்படைக்கப்படாத ஆயுதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) அரசாங்கத்தின் பொறுப்பில் எடுக்கப்படாத ஆயுதங்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

905/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காத்தான்குடி நகர எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் மறுசீரமைக்கப்பட வேண்டியதும் புதிதாக நிறுவப்பட வேண்டியதுமான வடிகாலமைப்புத் தொகுதிகள் காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) தற்போதுள்ள வடிகாலமைப்புத் தொகுதிகளை மறுசீரமைக்கவும், புதிய வடிகாலமைப்புத் தொகுதிகளை நிறுவவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

988/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் தற்போதுள்ள எரிபொருள் பவுசர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எரிபொருள் ஏற்றிச்செல்வதற்காக கூட்டுத்தாபனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பவுசர் உரிமையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பவுசர் உரிமையாளர்கள் அல்லது நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iv) 2015ஆம் ஆண்டு முதல் இதுவரையில் எரிபொருள் போக்குவரத்திற்காக பவுசர் உரிமையாளர்களுக்குக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நடைமுறை யாதென்பதையும்;

(v) மேற்படி காலப்பகுதியினுள் எரிபொருள் போக்குவரத்திற்காக பவுசர் உரிமையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) எரிபொருள் போக்குவரத்திற்காக புகையிரதம் போன்ற அரச துறைப் போக்குவரத்துச் சேவைகளை அதிகளவில் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1496/2025

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேசச் செயலாளர் பிரிவிற்குட்பட்ட தாண்டியடி கிராமத்தில் அமைந்துள்ள மயானத்தில் விசேட அதிரடிப் படையினருக்குச் சொந்தமான முகாமொன்று நிறுவப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி மயானத்தில் அடக்கஞ் செய்யப்பட்டுள்ளவர்களின் உறவினர்களால் நடத்தப்படும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) 2025.08.13ஆந் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், குறித்த இடத்தைக் கண்காணித்து நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்காக அம்மயானப்பூமியின் ஒரு பகுதியை ஒதுக்குவது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கு அமைவாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) இனிவரும் காலங்களில் குறித்த மயானத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்காக உறவினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட தாண்டியடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் விளையாட்டு மைதானம், தற்போது விசேட அதிரடிப் படையினரின் முகாம் வளாகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களினதும், பாடசாலையினதும் நடவடிக்கைகளுக்காக மேற்படி விளையாட்டு மைதானத்தை மீண்டும் பாடசாலையிடம் ஒப்படைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1669/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு அந்தூரியம் பயிர்ச் செய்கையாளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்தூரியம் பயிர்ச்செய்கையின் பொருட்டு அரசாங்கம் அவர்களுக்கு வசதிகளை வழங்குகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த வசதிகள் யாவையென்பதையும்;

(iv) உள்நாட்டுப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு மேலதிகமாக வேறு தரப்பினருக்கு அந்தூரியம் பூக்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2398/2026

கௌரவ அஜித் கிஹான்,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பிரஜாசக்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் —

(i) பல்பரிமாண வறுமை ஒழிப்பிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) விசேட தேவையுடைய பாடசாலை மாணவர்களுக்கு நிதியுதவி அல்லது வேறு ஏதேனும் நிவாரணங்கள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(v) மாற்றுத்திறனாளிகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2026 ஒக்டோபர் 23, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

788/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ள இலங்கைக் குற்றவாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆட்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் தலைமறைவாகியுள்ள நாடுகள் யாவையென்பதையும்;

(iii) 2020ஆம் ஆண்டு தொடக்கம் அவர்களின் வழிநடத்தலின் கீழ் இடம்பெற்ற குற்றச் செயல்களினதும், கொல்லப்பட்ட ஆட்களினதும் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி குற்றவாளிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கும், அவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

949/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரவைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு முதல் இற்றைவரை கொழும்பு மாநகர சபை அதிகார எல்லைக்குள் பதிவாகிய காசநோய் நோயாளிகளின் எண்ணிக்கை, ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) காசநோய் ஏற்படுவதற்கு ஏதுவாக அமையும் காரணிகள் யாவை என்பதையும்;

(iii) கொழும்பு மாநகர சபை அதிகார எல்லைக்குள் காசநோய் பரவுவதைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1042/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கல்வி நிர்வாகச் சேவை உத்தியோகத்தர்களுக்குத் தாம் கடமையாற்றும் பாடசாலைக்கோ, வேறு அரசாங்கப் பாடசாலைக்கோ தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு இதற்கு முன்னர் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வசதியானது தற்போதைய அரசாங்கத்தினால் சுற்றறிக்கை அல்லது வேறு ஏதேனும் சட்டப்பூர்வ நடவடிக்கையூடாக நீக்கப்பட்டுள்ளதா அல்லது திருத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) குறித்த வசதியை மீண்டும் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1079/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டுத் தூதரகப் பணியகங்களில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களுக்கான சராசரிச் செயலாக்கக் காலம் எவ்வளவென்பதையும்;

(ii) குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தும் தாமதங்களுக்கான காரணங்கள் என்னவென்பதையும்;

(iii) அவசர சூழ்நிலைகளுக்கெனத் துரிதமான செயலாக்க நடைமுறைகள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) வெளிநாட்டுத் தூதரகப் பணியகப் பணியாளர்களின் வினைத்திறனினையும் செயலாற்றுகையினையும் கண்காணித்து மதிப்பிடுவதற்கான நடைமுறையினையும்;

(ii) தூதரகப் பணியகப் பணியாளர்களுக்கு எதிரான முறைப்பாடுகளைக் கையாண்டு ஆவன செய்வதற்காக இருக்கும் பொறிமுறைகளையும்;

(iii) இலஞ்சத்திற்காகத் தரகர்களுடன் கூட்டுச்சதியில் ஈடுபட்டமை பற்றிய சார்த்துதல்கள் தொடர்பாக கணக்காய்வுகள் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(இ) (i) வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளையும்;

(ii) வெளிநாட்டு விண்ணப்பதாரர்களுக்கான நிகழ்நிலைக் கண்காணிப்பு முறைமை அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும்;

(iii) குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் தாமதமான விண்ணப்பங்களுக்கு முன்னுரிமையளிப்பதற்கும் அதீத தாமதங்களுக்காக நட்டஈடு வழங்குவதைக் கருத்திற்கொள்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ள நடவடிக்கைகளையும்;

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1339/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாடுகளில் கைதுசெய்யப்பட்ட கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கையும், மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கையும் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி கடற்றொழிலாளர்களையும் படகுகளையும் விடுவித்துக்கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1367/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2026ஆம் ஆண்டில் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் பாலங்களை அபிவிருத்திச் செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ், நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாலங்களின் பெயர்ப் பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் அமைந்துள்ள அட்டப்பளம் பாலமானது ஒவ்வொரு வெள்ளப்பெருக்கு நிலையின் போதும் சேதத்திற்குள்ளாவதால் அவ்வீதியில் போக்குவரத்து தடைப்படுவதுடன், வெள்ள நிலைமைகளின்போது அதற்கு மாற்றீடாகத் தற்காலிகப் பாலங்கள் அமைக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) அந்தப் பாலத்தை நிரந்தரப் பாலமாக நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1381/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விசமாதல் குறித்த பல சம்பவங்கள் அண்மைக் காலத்தில் பதிவாகியுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ii) இந்த வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்களை ஒழுங்குறுத்துகை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள அரச நிறுவனம் யாதென்பதையும்;

(iii) வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்களை உரிய முறையில் ஒழுங்குறுத்துகை செய்வதற்குத் தேவையான சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதற்கும், இத்தகைய விசமாதல் தொடர்பான சம்பவங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1982/2026

கௌரவ லால் பிரேமநாத்,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில், பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவில், தம்பஹல மேற்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள ஊருபொக்க ஹீகொட வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைச்சுக்கு உரித்தான சுமார் இரண்டு ஏக்கர் காணி காணப்படுகின்றது என்பதையும்;

(ii) கம்சபா நீதிமன்ற முறை ஒழிக்கப்பட்டதன் பின்னர், மேற்படி காணி பயன்படுத்தப்படாமல் உள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணியை பிரதேச செயலாளரிடம் அல்லது வேறொரு அரச நிறுவனத்திடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி காணியை பொதுப் பயன்பாட்டிற்காகவோ, ஊருபொக்க ஹீகொட வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்காகவோ பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி காணியின் தற்போதைய சட்ட நிலைமை மற்றும் எதிர்பார்க்கப்படும் பயன்பாடு குறித்த அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2399/2026

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் தற்போது அடையாளங்காணப்பட்டுள்ள சரணாலயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி சரணாலயங்களின் நிலப்பரப்பு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி சரணாலயங்களில் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சரணாலயங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

2412/2026

கௌரவ சானக மாதுகொட,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009.05.19ஆந் திகதியன்றும், அதன் பின்னரும் 22 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்து, ஓய்வு பெறும் படை வீரர்களுக்கு 85% அதிகபட்ச ஓய்வூதியத்தை வழங்கும்போது சில உத்தியோகத்தர்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு அதிகபட்ச ஓய்வூதியத்தை வழங்குவதில் நிலவும் தடைகள் யாவையென்பதையும்;

(iii) அவ்வுத்தியோகத்தர்களுக்கு உரித்தான ஓய்வூதியத்துடன் ஏற்புடைய நிலுவைத் தொகையை செலுத்துவதற்கான வழிமுறையொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 நவம்பர் 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1195/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தில், நெடுந்தீவில் அமைந்துள்ள பாடசாலைகள் பௌதீக வளங்கள் மற்றும் பணியாட்டொகுதி பற்றாக்குறையுடன் இயங்குவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்தில் அமைந்துள்ள யா/நெடுந்தீவு மகா வித்தியாலயத்திற்குரிய பாடசாலை வகைப்படுத்தல் யாதென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் உட்பட அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) இன்றளவில் சேவையில் ஈடுபட்டுள்ள பணியாட்டொகுதியின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) தற்போதுவரை பணியாட்டொகுதியின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமலிருப்பதற்கு செல்வாக்குச் செலுத்தும் காரணங்கள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவைப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

(viii) ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மேற்படி பாடசாலையின் மாணவர்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1574/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தில், திருமுறிகண்டிப் பிள்ளையார் கோவிலுக்கு (விநாயகர் கோவில்) முன்னால் அமைந்துள்ள குடியிருப்பின் பின்புறத்தில் உள்ள வனப்பகுதி ஒதுக்குப் பிரதேசமாகும் என்பதையும்;

(ii) 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மேற்படி ஓதுக்குப் பிரதேசத்தில் வன அழிப்பு மேற்கொள்ளப்பட்டு நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மேற்படி ஒதுக்குப் பிரதேசம் இதுவரையில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிர்வாகத்திலிருந்து விடுவிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வன ஒதுக்குப் பிரதேசத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி வனப்பகுதியை ஒதுக்குப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்திய வர்த்தமானி அறிவித்தலின் திகதி மற்றும் இலக்கம் யாதென்பதையும்;

(iii) வன ஒதுக்குப் பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட மரம் வெட்டுதல் தொடர்பாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அரச மரக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களினால் குறித்த மரம் வெட்டும் நடவடிக்கை சட்டரீதியான அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1684/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிண்ணியா பிரதேசத்திலுள்ள சனத்தொகையுடன் நீர் பாவனையாளர்களின் எண்ணிக்கையினை ஒப்பிடுகையில், மேற்படி பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அலுவலகம் போதுமானதாக இல்லை என்பதையும்;

(ii) மேற்படி அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள வாகனம் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சபையின் கிண்ணியா அலுவலகத்தின் மூலமாகப் பராமரிக்கப்படும் குடிநீர் வழங்கப்பட்டுள்ள பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அலுவலகத்திற்குப் பதிலாக, வசதிகளுடன் கூடிய புதிய அலுவலகமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) புதிய நீர் இணைப்புகளுக்கு விண்ணப்பிக்கும் ஆட்களின் எண்ணிக்கை கிண்ணியா பிரதேசத்தில் அதிகரித்துள்ளமையால் புதிதாக பொது நீர் இணைப்புக்களை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1827/2026

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் வீதி விபத்துகள் காரணமாக வருடமொன்றிற்கு இடம்பெறுகின்ற மரணங்களின் எண்ணிக்கை மற்றும் காயமடைபவர்களின் சராசரி எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி விபத்துகள் காரணமாக தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் அங்கவீனமடையும் நபர்களின் சராசரி எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) விபத்துகளில் காயமடைபவர்களுக்காக ஆண்டொன்றிற்கு ஒதுக்கப்படும் கட்டில்களின் எண்ணிக்கை மற்றும் கட்டில்களை பயன்படுத்தும் நாட்களின் ஆகியவற்றின் சராசரி எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) வீதி விபத்துகளுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக வருடமொன்றுக்குச் செலவாகும் தொகை அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2126/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மேல் மாகாணத்திலுள்ள, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், பதிவு செய்யப்படாத கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மாகாணத்தினுள் காணப்படும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தலுக்கு உட்பட்ட மற்றும் வைப்புக்காப்புறுதித் திட்டத்தின்கீழ் உள்வாங்கப்பட்ட மற்றும் உள்வாங்கப்படாத கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) 2025.12.31ஆம் திகதியன்று மாகாணத்தினுள் காணப்படும் கூட்டுறவு வங்கிகளின் வைப்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் வைப்புத்தொகை யாதென்பதையும்;

(vi) அத்திகதியன்று வைப்பாளர்களின் பணத்தைத் திரும்பச் செலுத்துவதற்குத் தவறியுள்ள கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை மற்றும் பணத்தொகை யாதென்பதையும்;

(vii) மேற்படி வங்கிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வைப்புகள் மற்றும் கடன்களைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்காகத் துரித நடைமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்குறிப்பிட்ட நடைமுறைகள் யாவையென்பதையும்;

(iii) பதிவு செய்யப்படாத, இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தலுக்கு உட்படாத கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அக்குறிப்பிட்ட சங்கங்களில் ஊழல்களையும் முறைகேடுகளையும் புரிந்த முகாமைத்துவத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2164/2026

கௌரவ சட்டத்தரணி சரத் குமார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'கல்லோயா பள்ளத்தாக்கு தேசியப் பூங்கா' தேசியப் பூங்காவாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) அத்தேசியப் பூங்கா உள்ளடங்கும் நிர்வாக மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தேசியப் பூங்கா அமைந்துள்ள மொத்தக் காணியின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) மொனராகலை மாவட்டத்திலுள்ள மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதுலுவெல கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, தேசியப் பூங்காவின் எல்லைக்குள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக சட்டரீதியான அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேசிய பூங்காவுக்குச் சொந்தமான மடுல்ல பிரதேச செயலகப் பிரிவின் பதுலுவெல பிரதேசத்தின் ஒதுக்கப் பகுதி எல்லைக்குள் நிரந்தர வீடுகள் அல்லது வேறு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனின், அந்த ஒதுக்கப் பகுதி எல்லைக்குள் தற்போது வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அக்குடியிருப்பாளர்கள் மற்றும் பயிர்ச்செய்கையாளர்கள் தொடர்பான சட்ட நிலைப்பாடு யாதென்பதையும்;

(iv) அம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2198/2026

கௌரவ ஜே.சி. அலவத்துவல,— பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேற்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை விஞ்ஞான சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை யாதென்பதையும்;

(ii) மேற்படி சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி சேவையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) ஒவ்வொரு அரச நிறுவனத்திலும் குறித்த சேவைக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிப் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி சேவையில் நிலவும் வெற்றிடங்கள் காரணமாக, சம்பந்தப்பட்ட பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக வேறு சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தால், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி சேவையில் நிலவும் வெற்றிடங்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2275/2026

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையிலுள்ள மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குறித்த நபர்களது எண்ணிக்கை மாற்றுத்திறன் தன்மையின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அம்மாற்றுத்திறனாளிகளின் நலனோம்புகைக்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2381/2026

கௌரவ சுனில் ராஜபக்ஷ,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்பொன்றிற்காகப் புறப்பட்டுச் சென்ற இலங்கைத் தொழிலாளர் ஒருவர், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்தில் பணியில் ஈடுபட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள பின்னாய்வு முறையியல் யாதென்பதையும்;

(ii) தொழிலாளர் ஒருவர் வெளிநாட்டிற்குச் சென்ற பின்னர், இலங்கையில் வசிக்கும் தமது உறவினர்களுடன் தொடர்பைப் பேணிவருகின்றார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு உரிய தினத்தில் உரிய சம்பளம் கிடைப்பதையும், பொருத்தமான தங்குமிடம், உணவு மற்றும் குளிர்கால ஆடைகள் உள்ளிட்ட தேவையான வசதிகள் கிடைப்பதையும் உறுதிப்படுத்தும் முறை யாதென்பதையும்;

(iv) அத்தொழிலாளர்களின் உடல் மற்றும் உள ரீதியான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முறை யாதென்பதையும்;

(v) வெளிநாட்டுத் தொழிலாளர்கள் ஒப்பந்த காலம் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கைக்குத் திரும்பி வருகின்றார்களா அல்லது ஒப்பந்த காலத்தை நீடித்துக்கொள்கின்றார்களா என்பது தொடர்பில் ஒழுங்குறுத்துகை வழிமுறையொன்று பேணப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(vi) வெளிநாட்டு வேலைவாய்ப்புக் காலப்பகுதியில், அத்தொழிலாளரின் வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலனோம்புகைக்காக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2484/2026

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி. சூரியபண்டார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்வேறு தொழில்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள முப்படை உத்தியோகத்தர்களும் ஏனைய பதவியணியினரும் பணியிலிருந்து விலகிச் செல்லும் போக்கொன்று நிலவுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) பணியிலிருந்து விலகி வெளிநாட்டிற்குச் சென்று இந்நாட்டிற்குத் திரும்பும்போது கைது செய்யப்படும் அல்லது சரணடையும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) பணியிலிருந்து விலகி வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் பணியில் இணையக்கூடிய வாய்ப்புள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், ஏன் என்பதையும்;

(vi) பணியிலிருந்து விலகுவதற்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர் ஒருவரது விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்க உத்தியோகத்தர்களின் 05 வருட வெளிநாட்டு விடுமுறைத் திட்டத்தில் முப்படை அங்கத்தவர்களும் உள்வாங்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) இன்றேல், ஏன் என்பதையும்;

(iii) மேற்படி முறையின் கீழ் வெளிநாட்டு விடுமுறையைப் பெற்றுக்கொண்ட முப்படை அங்கத்தவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அந்த வெளிநாட்டு விடுமுறைகள் பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருப்பின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) பணியிலிருந்து விலகிச் சென்றுள்ள மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்குப் பொது மன்னிப்புக் காலத்தை வழங்காமைக்கும், கடந்த பொது மன்னிப்புக் காலங்களுக்குள் உள்வாங்கப்படாமைக்குமான காரணங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 நவம்பர் 04, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2208/2026

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நீதித்துறை உத்தியோகத்தர்களின் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை, நிறுவன வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2250/2026

கௌரவ டப்ளியூ. எச். எம். தர்மசேன,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான சீனித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் அவற்றின் பெயர்களும் யாவையென்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை, மேற்படி ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்பட்ட சீனியின் அளவு தொழிற்சாலை வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் கரும்பு வழங்குகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை தொழிற்சாலை வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி தொழிற்சாலைகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2295/2026

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதி இல்லாத அல்லது பல்வேறு காரணங்களால் சாதாரண மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்த முடியாத சில நபர்கள் 48cc இயந்திரத் திறன்கொண்ட மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தி வருவதை அறிவாரா என்பதையும்;

(ii) பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேற்படி மோட்டார் சைக்கிள்களை செலுத்துகின்ற நபர்களிடம் சாரதி அனுமதிப்பத்திரத்தை கேட்பதனூடாகவும், சட்ட நடவடிக்கை மேற்கொள்வதனூடாகவும் அவர்கள் அசௌகரியத்திற்கு உள்ளாவதை அறிவாரா என்பதையும்;

(iii) தற்போது காணப்படுகின்ற சட்டத்தின் அடிப்படையில் 48cc இயந்திரத்திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களை ஓட்டுவதற்குச் சாரதி அனுமதிப்பத்திரம் கட்டாயமானதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்துகின்ற விவசாயிகள், முதியோர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு சலுகை அடிப்படையிலான சட்ட அல்லது நிர்வாக முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2299/2026

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ள, எஞ்ஜின் கொள்ளளவு 50 கன சென்டிமீட்டருக்கு (50cc) குறைவான மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மொபெட்களின் (Moped) எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மொபெட்களைப் பதிவுசெய்வதற்காக தற்போது நடைமுறையிலுள்ள முறைமை யாதென்பதையும்;

(iii) எஞ்சின் கொள்ளளவு 50cc இற்கும் குறைவான மோட்டார் சைக்கிள்களைப் பதிவுசெய்வதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள், சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் தொழில்நுட்பத் தேவைகள் யாவையென்பதையும்;

(iv) 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட, எஞ்சின் கொள்ளளவு 50cc இற்கும் குறைவான மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மொபெட்களைப் பதிவுசெய்வதற்காக எளிய நடைமுறையொன்றை அல்லது விசேட சலுகைக் காலமொன்றை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2457/2026

கௌரவ தனுஷ்க ரங்கநாத்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நாளொன்றுக்கு எதிர்பார்க்கப்படும் புகையிரதப் பயணங்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது நாளொன்றுக்கு இயக்கப்படும் புகையிரதப் பயணங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி முழுப் புகையிரதப் பயணங்களையும் மேற்கொள்வதற்குத் தேவையான புகையிரத என்ஜின்கள் மற்றும் இயக்கவலுத் தொகுதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இலங்கை புகையிரதத் திணைக்களத்திடம் காணப்படும் மொத்தப் புகையிரத என்ஜின்கள் மற்றும் இயக்கவலுத் தொகுதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி என்ஜின்கள் மற்றும் இயக்கவலுத் தொகுதிகளில் தற்போது முனைப்பாக இயங்கும் நிலையிலுள்ளவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) தற்காலிகமாக இயங்குவதிலிருந்து அகற்றப்பட்டிருப்பினும் மீண்டும் இயங்கும் நிலைக்குக் கொண்டு வரக்கூடிய மட்டத்திலுள்ள புகையிரத என்ஜின்கள் மற்றும் இயக்கவலுத் தொகுதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) செயலிழந்த மட்டத்திலுள்ள மேற்படி புகையிரத என்ஜின்கள் மற்றும் இயக்கவலுத் தொகுதிகளை மீண்டும் பயணத்தில் ஈடுபடுத்துவதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி நடவடிக்கைகளின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?